2015 செப்டம்பர் 1]

கட்டமைப்பினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி போன்ற இடங்களில் அவை சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதுபோல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அந்தத் தொகுதியிலிருந்து இடத்தினை ஏற்பாடு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒப்படைக்கும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தகுந்த இடம் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்கப்படுகின்றபோது, இந்தத் துறை அதை ஆய்வு செய்யும். அங்கே எந்தத் துறையில் விளையாட்டு வீரர்கள், எவ்வளவு இருக்கிறார்கள்; என்ன விளையாட்டிற்கு மைதானம் அமைக்க வேண்டும் என்பதையெல்லாம் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

191—

அடிப்படை வசதிகள் மற்றும் கட்டடங்கள்

***16811—திரு. சு. ரவி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்திலுள்ள அரசு ஆதி திராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கழிவறை, கூடுதல் ஆய்வகக் கட்டடங்கள் கட்டவும், ஆதி திராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, வினாவிற்கு விடையளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் இரண்டு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளும், இரண்டு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளும், ஒரு நடுநிலைப் பள்ளியும், 11 ஆரம்பப் பள்ளிகளும் உள்ளன. அரக்கோணம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 968 மாணவியரும், அரக்கோணம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 500 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர். அரக்கோணம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஏற்கெனவே நபார்டு—12, திட்டத்தின்கீழ், 4 வகுப்பறைகள், 1 ஆய்வகக் கட்டடம், குடிநீர் வசதி மற்றும் கழிப்பிட வசதிகள் ரூ.51.66 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2 வகுப்பறைகள், ஓர் ஆய்வகக் கட்டடம், ஒரு கழிப்பறை கட்டடம், குடிநீர் வசதி போன்றவை ரூ.44.19 இலட்சம் மதிப்பீட்டிலும், மேலும், அரசாணை நிலை எண் 108, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 30—12—2014—ல் நபார்டு—19 திட்டத்தின்கீழ், இரண்டு பள்ளிகளுக்கும் தலா ரூபாய் 2 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டு, கூடுதலாகக் குடிநீர் வசதியும் செய்யப்பட்டு, தற்போது அப்பள்ளிகளில் தேவைக்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: எனவே, அரக்கோணம் ஆதி திராவிடர் நல பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரும் அனைத்து வசதிகளும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் ஏற்கெனவே செய்து முடிக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழைப்போர் அனைவரும் ஒன்று—எனும்
உணர்வினில் வளர்வது இன்று
வலியோர் ஏழையை வாட்டிடும் கொடுமை
இனி ஒரு நாளும் நடக்காது".

என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடலுக்கு இலக்கணமாய், (மேசையைத் தட்டும் ஒலி) ஈன்றெடுத்த தாய் தம் புதல்வனை கண்ணும் கருத்துமாய்க் காப்பதுபோல, ஆதி திராவிட மக்களுக்குத் தாயாகவும், தந்தையாகவும், தெய்வமாகவும் இருந்து காத்துவருபவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிட மக்களுக்கு கல்வி அறிவுதான் நிரந்தரத் தீர்வு; அவர்களின் அறியாமையை அறவே ஒழிக்க வேண்டுமென அடுக்கடுக்கான கல்வி சார்ந்த திட்டங்களை விதி 110—ன்கீழ் வாரி வழங்கி, வாழும் அம்பேத்கராகத் திகழ்பவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களுக்கு அரசின் சேவைகள் எளிதாகவும், விரைவாகவும் சென்றடைய 8 பிர்காக்களைக் கொண்டு மிகப்பெரியதாக இருந்த அரக்கோணம் தாலுகாவை, இரண்டாகப் பிரித்து, நெமிலியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய தாலுகாவை உருவாக்கி, எங்கள் தொகுதி மக்களின் வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் கோடானுகோடி நன்றியினை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா தொடுக்கப்பட்டு, அதற்கான விடை அவைக்கு வருவதற்கு முன்பே, அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரசு ஆதி திராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கழிவறையும், ஆய்வகக் கட்டடமும், அரசு ஆதி திராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அடிப்படை வசதியும் செய்து தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாணவ மாணவியரின் சார்பிலே என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, அந்த 2 பள்ளிகளும், 1982 ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் கட்டப்பட்ட பள்ளிகளாகும். அந்த இரண்டு பள்ளிகளினுடைய மேல்தளங்கள் பழுதடைந்துள்ளன. எனவே, ஆதி திராவிட மக்களுடைய தாயாகவும், தந்தையாகவும் விளங்கி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், அந்தப் பழுதடைந்துள்ள இரண்டு கட்டடங்களையும் அகற்றி, அப்பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்களை அனைத்து வசதிகளோடு கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் ஆதி திராவிடர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளிலும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடங்களை இடித்துவிட்டு ஒவ்வொரு பள்ளிக்கும் தலா 36 வகுப்பறைகள் வீதம், ரூபாய் 3.61 கோடி வீதம், ரூபாய் 7.22 கோடிக்கு நபார்டு–20 திட்டத்தின்கீழ் கட்டடங்கள் கட்ட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கியிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், கூடுதல் வகுப்பறைகள், இதர கூடுதல் வசதிகளுடன் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு திட்டத்தின்கீழ் புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறியதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*